(4). அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(ஆ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"பேரவையின் 41(3)-வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) பழமங்கலம் கிராம அரிசன காலனி தீ விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் க. மருதாசலம், ரா. அய்யாசாமி, க. நாச்சிமுத்து ஆகியோர் பழமங்கலம் கிராமம் அரிசன காலனி தீ விபத்து குறிதது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கோவை மாவட்டம் ஈரோடு அருகிலுள்ள பழமங்கலம் கிராம அரிசன காலனியில் 12-4-79 ஆம் தேதியன்று எற்பட்ட தீ விபத்தினால் 58 குடிசைகள் எரிந்து போனது பற்றி."

*திரு. பீ. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : 11-4-79 அன்று மாலை சுமார் 5.30 மணிக்கு கோயம்புத்தூா மாவட்டத்தில், ஈரோடு வட்டத்தைச் சார்ந்த பழமங்கலம் மற்றும் குலவிளக்கு கிராமங்களைச் சேர்ந்த, சிற்றூராகிய கோயில் பாளையத்திலுள்ள, ஆதித் திராவிட மக்கள் வாழும் குடியிருப்பில் ஒரு தீ விபத்து நிகழ்ந்தது. செய்தி கிடைத்ததும், ஈரோடு வட்டாட்சியர் விபத்து நிகழ்ந்த இடத்திற்கு விரைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். தீ இரவு 10 மணி சுமாருக்கு அணைக்கப்பட்டது. நேரடி ஆய்விற்குப் பிறகு, அவர் வேளாண்மைத் தொழிலாளருக்குச் சொந்தமான 58 ஓலைக் குடிசைகள் முழுமையாக எரிந்து சாம்பலாயின எனக் கணக்கிட்டார். வட்டாட்சியர், பாதிக்கப்பட்டுள்ள மக்களைக்